## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 78. பத்ராச்சல ராமதாஸ்

ஆந்திராவின் மாணிக்கவாசகர் இவர் என்று கூறலாம்.

அரசன் செய்ய வேண்டிய சமூஹப்பணிகளை அவன் செய்யாமல் இருந்த போது, அவனது ப்ரதிநிதியாய் ராமதாஸ் செய்தார்.ஆனால் அவை அரசனால் ஏற்றுக் கொள்ளப் படவில்லை.அரசனும் இவருக்கு அரச தண்டை அளித்தார்.

பத்ராச்சல கோயில் திருப்பணி என்பதை அவ்வூரைச் சேர்ந்த பல சமூஹ நலப்பணிகளுடன் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.கோயிலைச் சேர்ந்து ஊரும் வளர்கிறது அல்லவா?அதனால் சமூஹப்பணியையே இவர் கோயிலை முன்வைத்துச் செய்தார்.

இவர் கோல்கொண்டா கோட்டைச் சிறையில் அடைபட்ட போது அரச தண்டனையை எண்ணி எண்ணி அழுது பாடியதாகக் கூறுவது மஹா தவறு.இங்கே அவர் ”என் கடனை ராமா அடைக்க வழி செய்!” என்பது தன் ஜீவனை ப்ரஹ்மத்தில் லயிக்க வைக்கும் ரஹசியமே ஆகும்.இந்த ஆத்மா இறைவனின் கடன்.அதை நாம் நமது என்று எண்ணிக் கொண்டு உழல்கிறோம்!

மேலும் தன்னைச் சிறையில் இருந்து ராமதாஸ் விடுவிக்க வேண்டி அழுதார் என்பது பிறவி என்ற சிறையில் இருந்து என்பதே ஆகும்.

அரசாங்க வரிப்பணத்தை அரசனின் அனுமதி இன்றிச் செய்யும் போது ஏற்படும் தண்டனையை அவர் அறிவார்.அதை அனுபவித்து அதன் மூலம் பிறவி என்ற சிறைக்கொடுமையில் இருந்து மீள இவர் பிறவி சங்கல்பம் செய்தார் என்பதே உண்மை.

இவரது ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்கள் பாவ பக்தியில் எளிய அழைகிய பாடல்களாக சிறையில் வெளியாயின. அவற்றைக் கேட்டு பல கைதிகளும் மனதை ஆன்மீக நெறியில் செலுத்தினர் என்பதை உணர்தல் வேண்டும்.

பல கைதிகள் இவரது பாடல்களை செங்கல், கரித் துண்டுகளில் சிறைச் சுவற்றில் எழுதினர்.

இறைவன் அவரது கடனை அடைத்தான்.

கபீர் தாஸர் மூலம் ராமதாஸ் ஸ்ரீராம தீக்ஷை பெற்றவர்.

ஸ்ரீராம நவமி அன்ன தான விருந்தின் சமயம் தன் மகன் கஞ்சிப் பாத்திரத்துள் விழுந்து இறந்து போக, அன்ன தானம் முடிந்த பின் தன் ராம ஜெப சக்தியால் அவனை உயிர் மீட்டார் ராமதாஸ்.

இவரது பூஜா விக்ரஹம் மிகவும் அழகிய சாளக்ராம ராமர்.இவருக்கு நிர்விகல்ப நிர்குண பாவம் வரவேண்டி, கபீர் அதை ஆற்றில் வீச, அதைத் தாங்கிக் கொள்ளாமல் ராமதாஸ் வ்யாதிக்குள் விழ, மீண்டும் கபீர் தன் சக்தியால் அதை மீட்டுக் கொடுத்தார்.

கோபண்ணாவான ராமதாஸ் ஸ்ரீமத் த்யாகராஜரால் மிகவும் மதிக்கப்பட்ட ஆச்சாரியர் ஆவார்.

ஆந்திராவின் த்யாகராஜர் என்றும் இவரைக் கூறுவர்.

ஸ்ரீரங்கனும் ஆண்டாளும் போல், ஸ்ரீநாதனும் மீராவும் போல், பாண்டுரங்கனும் அன்பர்களும் போல் பத்ராச்சல ராமனும் ராமதாஸும் ஐக்யம் ஆகினர்.

ஹரி ஓம்!